தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 129 | 4 Pages | 7.12.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 129 | 4 பக்கங்கள் | 7.12.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை யுடைத்திவ் வுலகு**

**விளக்கம்:** நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமைஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

# ரூ.1383 கோடியில் 79 புதிய திட்டப்பணிகள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை, டிச.7

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.1383 கோடி மதிப்பீட்டில் 79 திட்ட பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் வால்டாக்ஸ் சாலையில் 129.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 700 புதிய குடி யிருப்புகள், ஸ்டான்லி மருத்துவமனை சாலையில் 143.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 776 புதிய குடியிருப்புகள், கொன்னூர், திருவொற்றியூர், பெரம்பூர் சென்ட்ரல் நிழற்சாலை, கொண்டித்தோப்பு, திரு.வி.க. நகர் சந்திரயோகி சமாதி சாலை, புழல்விளாங்காடுபாக்கம் ஆகிய இடங்களில் ரூ.57 கோடி மதிப்பீட்டில் புதிய சமு தாயக்கூடங்கள் கட்டுதல், ரூ.21 கோடி மதிப்பீட்டில் தண்டையார்பேட்டையில் விளையாட்டு அரங்கம், வில்லிவாக்கம்அகத்தியர் நகர் மற்றும் ராயபுரம் மூலகொத்தளத்தில் விளையாட்டு திடல்கள், கொளத்தூர் ஜவஹர் நகர் மற்றும் பெரியார் நகர் நூலகங்களை 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்துதல், கொளத்தூரில் 30 கோடி ரூபாய் மதிப் பீட்டில் மக்கள் சேவை மையம் கட்டுதல், கொளத் தூர் நேர்மை நகரில் 36.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய காவல் நிலையம் கட்டுதல், என 421 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 15 புதிய திட்டப்பணிகள் செய்யப்படுகிறது.எண்ணூர்,கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, பேசின் பாலம், பெரம்பூர், புரசைவாக்கம், அயனாவரம் ஆகிய இடங்களில் உள்ள மாநகராட்சி பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுதல், மாத்தூர், கொடுங்கையூர், ராயபுரம், பெரம்பூர், வண்ணாரப் பேட்டை – சோலையப்பன் தெரு, பெரியதம்பி தெரு மற்றும் வால் டாக்ஸ் சாலை, பேசின் பாலம் – கத்படா பிரதான சாலை மற்றும் சண்முகம் தெரு, செனாய் நகர் ஆகிய இடங்களில் உடற்பயிற்சி கூடங்கள், வியாசர்பாடி மற்றும் பெரம்பூர் ஆகிய இடங்களில் விளையாட்டு மைதானங்கள், வில்லிவாக்கத்தில் மறுவாழ்வு மையம் அமைத்தல், கொடுங்கையூரில் சமுதாயக்கூடம், சேத்பட்டு சுற்றுச் சூழல் பூங்காவை மேம்படுத்துதல், கத்திவாக்கம் மேம்படுத்தப் பட்ட நகர்ப்புற சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டிடம், ராயபுரம் மற்றும் தண்டையார் பேட்டை ஆகிய இடங்களில் மழைநீர் வடிகால் பணிகள், காசிமேடு, கொளத்தூர், பல்லவன் சாலை ஆகிய இடங்களில் எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிகள், குளங்களை சீரமைக்கும் பணிகள், மண்டலம் 1 முதல் 8 வரையில் உள்ள மின் மாற்றிகளை சுற்றி அழகுபடுத்தும் வகையிலும், பாதுகாப்பு நோக்கிலும் அமைக்கப்பட்டுள்ள பார்வை மறைப்பான்கள், பெரம்பூரில் இறைச்சிக் கூடம் அமைக்கும் பணி, கோடம்பாக்கம் மகப்பேறு மருத்துவமனையை மேம்படுத்துதல், என 204 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 45 புதிய திட்டப்பணிகள் செய்யப்படுகிறது.தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் தடையில்லா மின்சாரம் வழங்கிட டேவிட்சன் தெரு



வில் 33/11 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைத்தல் மற்றும் 310 ஆர்.எம்.யு மின் உபகரணங்கள் நிறுவுதல், என 70 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2 திட்டப்பணிகள் செய்யப்படுகிறது.தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் துறைமுகத்தில் 269 புதிய குடியிருப்புகள், புளியந்தோப்பில் 612 புதிய குடியிருப்புகள் மற்றும் எல்லீஸ்புரத்தில் 65 புதிய குடியிருப்புகள் கட்டுதல், என 134 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய திட்டப்பணிகள் செய்யப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## துண்டு அணிந்து மெட்ரோ ரெயிலில் 4 பெண்கள் பயணம் வீடியோ



ரஷ்யா, டிச.7

ரஷியாவை சேர்ந்தவர் கேத் சும்ஸ்கயா. பிரபல மாடல் அழகியான இவர்சமூகவலைத்தளத்தில்வீடியோ பதிவிடுவதைவாடிக்கையாககொண்டுள்ளார். 30 லட்சம் பேர் இவரை பின்தொடர்ந்து வருகிறார்கள்.

இந்தநிலையில் தோழிகள் 3 பேருடன் இணைந்து குளியல் அறையில் பயன்படுத்தும் துண்டு மட்டும் அணிந்தவாறு மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தார். இதுதொடர்பான வீடியோவை அவர் இன்ஸ்டாகிராமில் பதிவேற்றி உள்ளார். அதில் அரைகுறையாக உடம்பை மூடிய படி, 'ஹை ஹீல்ஸ்' செருப்பு அணிந்தவாறு அவர்கள் 4 பேரும் மெட்ரோ ரெயிலுக்குள் ஏறுகிறார்கள்.

பயணிகள்கூட்டம்அதிகம் இருக்கும் ரெயிலில் ஆண்பயணிகள்அருகே நெருக்கமாக அமர்ந்து கொள்கிறார்கள். பின்னர் அவர்களுடன் செல்போனில் புகைப்படம் எடுத்து கொண்டு லூட்டி அடிக்கிறார்கள். இந்த வீடியோ ஒரு வாரத்திற்குள் 20 லட்சம் பார்வைகளையும் 2½ லட்சம் லைக்குகளை பெற்று வைரலாகி வருகிறது.

## சூட்கேசுக்குள் வைத்து பூட்டியதில் காதலன் மரணம் காதலிக்கு ஆயுள் தண்டனை



அமெரிக்கா, டிச.7

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள ஓர்லாண்டோ நகரை சேர்ந்த பெண் சாரா பூன் (வயது 47). இவரும் ஜார்ஜ் டோரஸ் (42) என்பவரும் காதலித்து வந்தனர். ஒரே வீட்டில் வசித்து வந்த இருவரும் கடந்த 2020ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ந் தேதி வீட்டுக்குள் கண்ணாமூச்சி விளையாடினர். இருவரும் அதீத மதுபோதையில் இந்த விளையாட்டை விளையாடினர். விளையாட்டின்போது காதலர் ஜார்ஜ் டோரசை சாரா ஒரு சூட்கேசுக்குள் வைத்து பூட்டினார்.

பின்னர் போதை தலைக்கேறிய நிலையில் சாரா, காதலன் தாமாக சூட்கேசில் இருந்து வெளியே வருவார் என நினைத்துக் கொண்டு தூங்க சென்றுவிட்டார். மறுநாள்காலை எழுந்து காதலனை தேடினார். பின்னர்அவரை சூட்கேசுக்குள் வைத்து பூட்டியது நினைவு வந்து பதறியடித்துக் கொண்டு சூட்கேசை திறந்தார். அப்போது ஜார்ஜ் டோரஸ் சூட்கேசுக்குள் பிணமாக கிடந்தார். அவர் மூச்சு திணறலுக்கு ஆளாகி இறந்தது தெரியவந்தது.

இந்த விவகாரத்தில் சாராவை கைது செய்த போலீசார் அவர் மீது கொலை வழக்குப்பதிவு செய்தனர். இது தொடர்பான வழக்கு கடந்த 4 ஆண்டுகளாக நடந்து வந்தது. இந்த வழக்கின் இறுதி விசாரணை கடந்த திங்கட்கிழமை நடந்தது. இதில் சாரா மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன. இதையடுத்து அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

## கலிபோர்னியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: அச்சத்தில் உறைந்த மக்கள்

வாஷிங்டன், டிச.7

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஃபெர்ண்டலே பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.0 ஆக பதிவானது. வடக்கு கலிபோர்னியா கடற்கரை பகுதிகளில் நிலநடுக்கம் உணரப்பட்டது. நிலநடுக்கத்தால் அங்குள்ள கட்டிடங்கள் குலுங்கின. பீதியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடிவந்தனர். சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டதால் மக்கள் அச்சமடைந்தனர். சிறிது நேரத்தில் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல் வெளியாகவில்லை.

## உலகின் டாப் 100 நகரங்கள் பட்டியலில் இடம்பிடித்த ஒரே இந்திய நகரம் இதுதான்

லண்டன், டிச.7

யூரோமானிட்டர் இன்டர்நேஷனல் என்னும் தரவு பகுப்பாய்வு நிறுவனம் சார்பில் ஆய்வு நடத்தப்பட்டு உலகின் சிறந்த 100 நகரங்கள் கொண்ட பட்டியல் வெளியிடப்பட்டு வருகிறது.

பொருளாதாரம், தொழில்துறை மற்றும் சுற்றுலாவின் செயல்பாடுகள், சுற்றுலா உள்கட்டமைப்பு, சுகாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்படுகிறது.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான 100 சிறந்த நகரங்களின் பட்டியல் சமீபத்தில் வெளியிடப்பட்டது. இந்தப் பட்டியலில் பாரிஸ் மீண்டும் முதலிடம் பிடித்து அசத்தியுள்ளது. இதன்மூலம் தொடர்ந்து 4வது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது. கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் போன்ற முக்கிய நிகழ்வுகளை நடத்தியது, சுற்றுலா சலுகைகளை வழங்கியதால் மக்களைக் கவர்ந்த நகரங்களில் பாரிஸ் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது என அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. மேட்ரிட் 2வது இடத்திலும், டோக்கியோ 3வது இடத்திலும், ரோம் 4வது இடத்திலும், மிலன் 5வது இடத்திலும் உள்ளன.

நியூயார்க் (6), ஆம்ஸ்டர்டாம் (7), சிட்னி (8), சிங்கப்பூர் (9), பார்சிலோனா (10) ஆகிய நகரங்கள் டாப்10 பட்டியலில் இடம்பெற்றுள்ள மற்ற நாடுகளாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் முதல் 100 இடங்களில் தலைநகர் டெல்லி மட்டுமே இடம்பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் டெல்லி 74வது இடத்தில் உள்ளது. கடைசி இடத்தில் கெய்ரோ உள்ளது. ஜுஹாய் (சீனா) 99வது இடத்திலும், ஜெருசலேம் 98வது இடத்திலும் உள்ளது.

## குடிமைப்பெருள் வழங்கல் குற்றப்புலானய்வுதுறை வெளியிட்டுள்ள தகவல்

கோவை, டிச.7


குடிமைப்பெருள் வழங்கல் குற்றப்புலானய்வுதுறை கோயமுத்தூர் அலகு எண் 870/2008 U/sU/s B(4) of TNSC (RCDS) order 1982 r/w 7(1) (a) (II) of EC Act 1955ந் படி வழக்கு கோவை நீதித்துறை நடுவர் எண்: 4 cc 95/2010ன் படி விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எதிரி முரளி, த/பெ.நாராயண பிள்ளிய, கருப்பையன் கோவில் வீதி, பாண்டிநகர், திருப்பூர்என்பவர் இன் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகமல் இருந்தும் 11/11/2024 ஆம் தேதி நீதிமன்றத்திற்கு நேரிலே வழகக்றிஞரால் மூலமாகவே ஆஜராகும்படி நீதித்துறை நடுவர் எண்4 கோவை அவர்கள் குடிமைபெருள் வழங்கல் குற்றுப்புலானய்வுதுறை கோயமூத்தூர் அலகு போலீஸ்சார் மூலமாக சம்மன் சார்பு செய்ய உத்தரவிட்டதின் படி மேற்படி முகவரிக்கு வந்தபோது முரளி த/பெ. நாராயணபிள்ளை எங்கு தேடிபார்த்தும் என்றும் கிடைக்க வில்லை என்றும் கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் பெறபட்டு மேற்கண்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் நீதித்துறைய நடுவர் எண் 4 கோவை அவர்கள் வரும் 10/12/2024 தேதியில் மேற்கண்ட வழக்கில் குற்றம் சாட்டபட்ட முரளி த/பெ. நாராயண பிள்ளை நீதிமன்றத்தில் நேரிலே அல்லது வழக்கறிஞர் மூலமாகவே ஆஜராக வேண்டும் அறிவிப்பு செய்து தவறும் பட்சத்தில் முரளி)த/பெ. நாராயன பிற்றை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து BNSS B4 கீழ் வழக்கில் விசாரணை மேற் கொள்ப்படும் என உத்தரவு பிறப்பித்துள்ளார்

## பெஞ்சல் புயல் பாதிப்பு; திமுக எம்.பிக்கள் தலா ரூ. 1 லட்சம் பொது நிவாரண நிதிக்கு வழங்க முடிவு

சென்னை: டிச.7

வங்கக்கடலில் உருவான பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்டு வீடுகளையும், உடமைகளையும் இழந்த மக்களுக்கு உதவும் வகையில், முதலமைச்சர் நிவாரண நிதிக்கு பலரும் தங்களால் இயன்ற உதவிகளை செய்து வருகின்றனர்.

மற்றொருபக்கம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு தேவையான நிவாரணப் பொருட்களை தமிழக அரசும், தனியார் தொண்டு நிறுவனங்களும், மாவட்ட நிர்வாகங்களும் கொடுத்து வருகின்றன. அந்த வகையில், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தமது ஒருமாத ஊதியத்தை வெள்ள நிவாரண நிதியாக வழங்கினார்.



இந்தநிலையில்,தி.மு.க. எம்.பி.க்களும் நிதி வழங்க முடிவு செய்துள்ளனர்.

மக்களவை மற்றும் மாநிலங்களவை திமுக எம்.பி.க்கள் தலா ரூ.1 லட்சம் வெள்ள நிவாரண நிதியாக முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்க முடிவு செய்துள்ளதாக டி.ஆர். பாலு தகவல் தெரிவித்துள்ளார்.

## செப்பாக்கத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா: திமுக கொடி ஏற்றம், நலத்திட்ட உதவிகள் வழங்கல், கல்வெட்டு திறப்பு

சென்னை, டிச.7

சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 114வது வட்ட திமுக இளைஞரணி சார்பில், மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், துணை முதலமைச்சர் மற்றும் கழக இளைஞரணி செயலாளர்உதயநிதிஸ்டாலின்அவர்களின் 47வது பிறந்தநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. செப்பாக்கம் அசூதிகான் தெருவில் நடைபெற்ற விழாவில் கழக கொடி ஏற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு, கல்வெட்டு திறப்பு நிகழ்ச்சிகள்நடைபெற்றன.நிகழ்ச்சியின் தலைமை: S.கார்த்திக் 114



வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் K.வினோத்குமார் 114வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வரவேற்புரை: K. கோபி 114வது வட்டச்செயலாளர் முக்கிய பங்கேற்பாளர்கள்: P. பாலசந்தர் மா. இளைஞரணி துணைஅமைப்பாளர்S.மதன்மோகன் பகுதி செயலாளர், 9வது மண்டல குழு தலைவர் கல்வெட்டு திறப்பாளர்:நே.சிற்றரசு சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் தயாநிதி மாறன் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், பணிகள் நிலைக்குழு தலைவர். நிகழ்வில் பங்கேற்றவர்கள்: 114வது வட்ட இளைஞரணி நிர்வாகிகள் R. மணிகண்டன், K. விக்னேஷ், G.வீரப்பா, A.பார்த்திபன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டுவிழாவைசிறப்பித்தனர்.

# அமைச்சர் பொன்முடி மீது சேறு வீச்சு: 2 பேர் மீது வழக்குப்பதிவு



விழுப்புரம், டிச.7

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள இருவேல்பட்டு பகுதியில் வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்தபோது அமைச்சர் பொன்முடி மீது சேறு வீசப்பட்டது. இது தொடர்பாக விசாரணை நடத்தி வந்த போலீசார் இருவர் மீது 3 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

பா.ஜ.க. பிரமுகர் விஜயராணி மற்றும் அவரது உறவினர் ராமகிருஷ்ணன் ஆகியோர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இருவரும் கைது செய்யப்பட வாய்ப்புள்ளது.

முன்னதாக, பெஞ்சல் புயலால் வரலாறு காணாத மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்தில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. புயல் கரையை கடந்த பின்னரும் குடியிருப்பு பகுதிகளை சூழ்ந்த வெள்ளம் வடியவில்லை. இதனால் உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் கிடைக்கவில்லை என்று கூறி பொதுமக்கள் ஆங்காங்கே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 3ந்தேதி இருவேல்பட்டு பகுதியில் வெள்ள பாதிப்பு குறித்து ஆய்வுக்கு சென்ற அமைச்சர் பொன்முடி மீது சேற்றை வீசிய சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் ஆவேசமாக இருந்த மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனை அடுத்து அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திய அமைச்சர் பொன்முடி மீது சேறு வீசப்பட்டது. அவருடன் ஆய்வுக்கு சென்ற கௌதம சிகாமணி, ஆட்சியர் மீதும் சேற்றை வீசியதால் பாதியில் புறப்பட்டனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# தூத்துக்குடியில் 5½ கிலோ கஞ்சாவுடன் சிக்கிய அண்ணன், தங்கை கைது



தூத்துக்குடி, டிச.7

தூத்துக்குடி நகர பகுதியில் மோட்டார் சைக்கிள் மூலம் கஞ்சா விற்பனை நடைபெற்று வருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனைத்தொடர்ந்து அவர்களை உடனடியாக கைது செய்ய மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட் ஜான் உத்தரவிட்டார். இதனைத்தொடர்ந்து நகரகூடுதல் போலீஸ் சூப்பிரண்டு மதன் மேற்பார்வையில் தூத்துக்குடி வடபாகம் இன்ஸ்பெக்டர் பாலமுருகன், நகர தனிப்படை சப் இன்ஸ்பெக்டர் ரவிக்குமார் தலைமையிலான போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது போலீசாரை கண்டதும் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓட முயன்றவர்களை பிடித்து சோதனை செய்தபோது, அவர்களிடம் 5 கிலோ 700 கிராம் கஞ்சா பொட்டலங்கள் மற்றும் ஒரு எடை எந்திரம் இருந்தது.

இதனைத் தொடர்ந்து அவர்களிடம் இருந்த மோட்டார் சைக்கிளுடன் அவற்றைபறிமுதல்செய்த போலீசார் விசாரணை நடத்தினர். அதில், அவர்கள் தூத்துக்குடி கிருஷ்ணராஜபுரம் 8வது தெருவை சேர்ந்த அற்புதராஜ் மகன் மைக்கேல் ராஜ் (வயது 30), அவரது தங்கை ஜெபா (27) என்பதும் தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். மைக்கேல் ராஜ் மீது புதுக்கோட்டை, தாளமுத்து நகர், தூத்துக்குடி வடபாகம், தெர்மல் நகர் உள்ளிட்ட போலீஸ் நிலையங்களில் ஏராளமான கஞ்சா வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கைதாகி இருப்பதும் தெரியவந்தது. அவர்களுடன் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு தப்பி ஓடிய அண்ணாநகர் விக்கி மற்றும் பிரகாஷ் குறித்தும் தொடர்ந்து அவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வாத்தலை அய்யன் வாய்க்காலில் வெள்ளம் 2 கிராமங்கள் துண்டிப்பு



மண்ணச்சநல்லூர், டிச.7

மண்ணச்சநல்லூர் அடுத்துள்ள வாத்தலை கிராமத்தில் அய்யன் வாய்க்கால் அமைந்துள்ளது. இந்த வாய்க்கால் முகொம்பு காவேரி ஆற்றில் இருந்து காவேரி, கொள்ளிடம் மற்றும் பாசனத்திற்காக புள்ளம்பாடி, அய்யன் என 2 பாசன வாய்க்காலாக பிரிகிறது.

வாத்தலை அருகே மனப்பாளையம், வேப்பந்துறை என 2 குக்கிராமங்கள் உள்ளன. இந்த 2 கிராமங்களை இணைக்கும் வகையில் புதிய பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் கிராம மக்கள் பயன்பாட்டிற்காக அய்யன் வாய்க்கால் குறுக்கே தற்காலிக தரைப்பாலம் அமைக்கப்பட்டு அதனை பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர்.

மேலும் தற்போது சில நாட்களாகவே பெய்ந்து வரும் மழையால் தரைபாலத்தில் சிறிது மழை நீர் தேங்கி இருந்தது. இந்த நிலையில் கொல்லிமலையில் கனமழை பெய்தது. இதனால் நீர்வரத்து அதிகரித்ததை அய்யன் வாய்க்காலில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதன்காரணமாக மக்கள் பயன்பாட்டிற்கு இருந்த தற்காலிக தரைப்பாலம் தண்ணீரில் மூழ்கியது.

இதனால் 2 கிராமங்கள் துண்டிக்கப்பட்டன. அங்கு வசிக்கும் பொதுமக்கள் 7 கி.மீ தொலைவு வரை சுற்றி செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் அய்யாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக அருகில் உள்ள வயல்வெளியில் தண்ணீர் சூழ்ந்து ஏராளமான ஏக்கரில் நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருக்கார்த்திகையையொட்டி உடுமலையில் மண் விளக்குகள் தயாரிக்கும் பணிகள் தீவிரம்



உடுமலை, டிச.7

திருக்கார்த்திகை விழா வருகிற 13ந்தேதி கொண்டாடப்படுகிறது. அன்று மாலை வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், கோவில் மற்றும் தெருக்களில் விளக்குகள் ஏற்றி வழிபடுவார்கள். இந்தநிலையில் திருக்கார்த்திகைக்கு தேவையான மண்விளக்குகள் தயாரிக்கும் பணி திருப்பூர் மாவட்டம் உடுமலை பகுதிகளில் தீவிரமாக நடந்து வருகிறது. புக்குளம், பூளவாடி, பள்ளபாளையம் என உடுமலை சுற்றுப் பகுதிகளில் ஏராளமான மண்பாண்ட தொழிலாளர்கள் பாரம்பரியமாக இதனை செய்து வருகின்றனர். விளக்குகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பஞ்சலிங்கம் என்பவர் கூறியதாவது: கார்த்திகை தீபத்திற்கு ஒரு முக விளக்கு, 2 முக விளக்கு, ஐந்து முக விளக்கு, 10 முக விளக்கு என பல்வேறு விளக்குகளை தயார் செய்கிறோம். மேலும் கொடிக்கம்பத்தில் வைக்கக்கூடிய பெரிய வகை விளக்குகளும் தயார் செய்யப்படுகிறது. பரம்பரை பரம்பரையாக இந்த தொழிலை செய்து வருகிறோம். மண்பாண்டங்கள் தயாரிப்பதற்கு என தனியாக மண் உள்ளது. செம்மண், களிமண், மணல் ஆகியவற்றை முறையாக கலந்து, நீரில் கரைத்து, கற்கள், குப்பைகளை அகற்றி வடிகட்டப்படுகிறது. அதற்குப்பிறகு, பிசைந்து பசை போல் ஆன பிறகு, மண் சக்கரத்தில் இட்டு சுழற்றப்பட்டு விளக்குகளாக மாற்றப்படுகிறது. அதற்கு பிறகு, சூளையில் வைத்து 15 நாட்கள் வரை வேக வைத்து, விளக்குகள் தயார் செய்யப்படுகிறது. சிறிய சுட்டி விளக்குகள் டஜன் 12 ரூபாய்க்கும், பெரிய விளக்குகள் ரகத்திற்கு ஏற்ப 10 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கோவில்களுக்கும், தீப கம்பங்களுக்கும், ஒரு லிட்டர் முதல் ஐந்து லிட்டர் கொள்ளளவு கொண்ட விளக்குகளும் தயாரிக்கப்படுகிறது. உடுமலை பகுதிகளில் உற்பத்தி செய்யும் விளக்குகள், கோவை, திருப்பூர், திண்டுக்கல், கேரளா, மூணாறு, பாலக்காடு உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்றார்.

# ஆற்றில் அடித்து செல்லப்பட்ட போலீஸ் சோதனை சாவடி



கடலூர், டிச.7

தென்பெண்ணையாற்றில் வரலாறு காணாத வகையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு. பெருமளவில் பாதிப்பு ஏற்பட்டது. இந்த நிலையில் தென்பெண்ணையாறு கரையோரம் இருந்த ஆயிரக்கணக்கான வீடுகள் மற்றும் நிலங்கள் கடும் பாதிப்படைந்தது. கடலூர் அருகே அழகிய நத்தம் பகுதியில் தென்பெண்ணை ஆறு குறுக்கே சிறிய பாலம் உள்ளது. இந்த பாலத்தில் ரஜினி நடித்த ஜெய்லர் படக்காட்சிகள் எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கரையோரத்தில் சிமெண்ட் மற்றும் இரும்பு கட்டிடத்தில் போலீஸ் சோதனை சாவடி இருந்து வந்தது. இந்த நிலையில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தற்போது தண்ணீர் வடிந்துள்ள நிலையில் சோதனை சாவடி கட்டிடங்கள் இருந்த சுவடு இல்லாமல் ஆற்றில் அடித்து செல்லப்பட்டது தெரிய வந்துள்ளது.

ஆற்றின் அழகிய நத்தம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கு செல்லக்கூடிய சாலைகள் முழுவதும் சிதைந்து கடும் சேதமடைந்து உள்ளது. பல்வேறு கிராமங்களுக்கு செல்லக்கூடிய சாலை சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் கடும் அதியடைந்து உள்ளனர். மேலும் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு பணிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழகத்தில் வருகிற 11ந்தேதி வரையிலான வானிலை நிலவரம்




சென்னை, டிச.7

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால் இன்று மற்றும் நாளை தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 7ந்தேதி முதல் 10ந்தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 11ந்தேதி கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 32°33° செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°26° செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும். அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 32°33° செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°26° செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும். 7 மற்றும் 8ந்தேதிகளில் தென்கிழக்கு வங்கக்கடலின் தெற்கு பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# பாபர் மசூதி இடிப்பு தினம்: 1000 போலீசார் பாதுகாப்பு



கோவை, டிச.7

பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு நேற்று (6ந் தேதி) நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. கோவை மாவட்டத்திலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. மாவட்டம் முழுவதும் மொத்தம் 1000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள். மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கூடுதல் எண்ணிக்கையில் போலீசார் நிறுத்தப்பட்டு கண்காணிப்பில் ஈடுபடுகிறார்கள். கோவை காந்திபுரம், உக்கடம், சிங்காநல்லூர், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், அன்னூர், வால்பாறை உள்ளிட்ட இடங்களில் உள்ள பஸ்நிலையங்களில் போலீசார் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளனர். இதேபோல ரெயில் நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. ரெயில் நிலைய நுழைவு வாயில்களில் உள்ள மெட்டல் டிடெக்டர் வாயில் வழியாக பயணிகள் அனுமதிக்கப்படுகின்றனர். பயணிகளின் உடைமைகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. ரெயில்களிலும், ரெயில் தண்டவாளங்களிலும் போலீசார் மெட்டல் டிடெக்டர் கொண்டு சோதனையில் ஈடுபடுகிறார்கள். ரெயில்களில் வரும் பார்சல்களை மோப்பநாய் கொண்டு போலீசார் சோதிக்கிறார்கள். விமான நிலையங்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. விமான நிலையத்துக்குள் நுழையும் அனைத்து பயணிகளும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள். மேலும் முக்கிய கோவில்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் முன்பும் போலீசார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டு உள்ளனர். இதற்கிடையே பாபர்மசூதி இடிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோவையில் நாளை சில அமைப்புகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட திட்டமிட்டுள்ளன. அங்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட உள்ளது.

# போலி பாஸ்போர்ட் மூலம் வந்த ஆந்திரா பெண் கைது

கோவை, டிச.7

கோவை விமான நிலையத்துக்கு நேற்று மாலை சிங்கப்பூரில் இருந்து ஒரு விமானம் வந்திறங்கியது. தொடர்ந்து அந்த விமானத்தில் வந்த பயணிகளிடம் நிலைய அதிகாரிகள் மற்றும் போலீசார் சோதனை நடத்தினார்கள். அப்போது கோவைக்கு வந்த ஒரு பெண்ணின் ஆவணங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் அவர் ஆந்திர மாநிலம் கண்டசாலா பகுதியைச் சேர்ந்த கனகதுர்கா (36) என்பதும், அவர் போலி பாஸ்போர்ட் மூலம் விமானத்தில் பயணம் செய்தது தெரிய வந்தது. மேலும் வேறு ஒருவரின் முகவரியில் புகைப்படத்தை ஒட்டி போலி பாஸ்போர்ட் தயாரித்து சிங்கப்பூருக்கு சென்று வீட்டு வேலை பார்த்த விவரமும் தெரிய வந்தது. தொடர்ந்து அவரை விமான நிலைய குடியேற்றப்பிரிவு அதிகாரி கிருஷ்ணஸ்ரீ, பீளமேடு போலீசில் ஒப்படைத்தார். இன்ஸ்பெக்டர் கந்தசாமி நடத்திய விசாரணையில் கனகதுர்காவிற்கு போலி பாஸ்போர்ட் எடுக்க, நாகேஸ்வரராவ் என்பவர் உதவி செய்தது தெரிய வந்தது. தொடர்ந்து போலி பாஸ்போர்ட் பயன்படுத்தி பயணம் மேற்கொண்டதாக கனகதுர்காவை போலீசார் கைது செய்தனர். மேலும் தலைமறைவாக உள்ள நாகேஸ்வரராவை போலீசார் தேடி வருகிறார்கள்.

# பரோட்டா சாப்பிட்ட கபடி வீரர் நெஞ்சு வலியால் மரணம்



திண்டுக்கல், டிச.7

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே உள்ள ராமராஜபுரத்தைச் சேர்ந்தவர் தீபக் பாண்டி (வயது 28).

இவர் கபடி விளையாட்டு வீரர். இவருக்கு புவனேஸ்வரி என்ற மனைவி உள்ளார்.

இவர் அதே பகுதியில் உள்ள ஒரு கடையில் புரோட்டா வாங்கி வீட்டில் உள்ள அனைவருக்கும் கொடுத்து தானும் சாப்பிட்டார். பின்னர் தீபக் பாண்டி வாசலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டது.

உடனே மயங்கி விழுந்த அவரை வீட்டில் இருந்தவர்கள் வாடிப்பட்டி தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அங்கு தீவிர சிகிச்சை அளிதும் பலனின்றி பரிதாபமாக தீபக் பாண்டி இறந்தார்.

திருமணமான ஒரே வருடத்தில் தீபக் பாண்டி இறந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. புரோட்டா சாப்பிட்டு நெஞ்சு வலி வந்து கபடி வீரர் உயிரிழந்ததால் அவரது நண்பர்களும் கிராமத்தினரும் அதிர்ச்சியடைந்தனர்.

# மக்கள் மீது தான் தவறு என்பதா? அமைச்சர் தா.மோ.அன்பரசனுக்கு அண்ணாமலை கண்டனம்

சென்னை, டிச.7

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது: சென்னை பல்லாவரம் அருகே, குடிநீரில் கழிவு நீர் கலந்ததால், உடல் நலம் பாதிக்கப்பட்டு, 23 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதும், மூன்று உயிரிழந்திருப்பதும் மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. உயிரிழந்தவர் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உடல் நலம் பாதிக்கப்பட்ட அனைவரும் விரைவாக நலம்பெற வேண்டும் கொள்கிறேன். இது குறித்து கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர்களிடம், குடிநீரில் கழிவு நீர் கலந்திருந்தால், 300 பேருக்கு மேல் பாதிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் 20 பேர் மட்டும்தான் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மக்கள் மீது தான் தவறு இருக்கிறது என்று திமிராகப் பதிலளித்துள்ளார் அமைச்சர் தா.மோ.அன்பரசன். குடிநீரில் கழிவு நீர் கலக்கவில்லை என்றால், அமைச்சரும், திமுகவினரும் அந்தப் பகுதியில் வழங்கப்படும் குடிநீரைக் குடிக்க முன்வருவார்களா? அதுமட்டுமின்றி, தெருக்களில் ப்ளீச்சிங் பவுடருக்குப் பதிலாக, மைதா மாவு தூவப்பட்டதா என்ற கேள்வியை எழுப்பிய ஊடக சகோதரரிடம், ப்ளீச்சிங் பவுடர் விலை ரூ. 10 13 தான் என்கிறார் அமைச்சர் தா.மோ.அன்பரசன். ஆனால், ப்ளீச்சிங் பவுடரை ஏன் ரூ.55க்கு மாநகராட்சி கொள்முதல் செய்திருக்கிறது என்ற ஊடக சகோதரரின் கேள்விக்கு அமைச்சரிடம் பதில் இல்லை. எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என, மக்கள் நலன் குறித்த அக்கறை சிறிதும் இன்றிச் செயல்படும் இந்த மக்கள் விரோத அரசால், அப்பாவி பொதுமக்கள் தினம் தினம் உயிரிழப்பு வரை பாதிக்கப்பட்டும், சிறிதும் வெட்கமே இன்றி, திராவிட மாடல் அரசு என்று விளம்பரம் செய்து கொண்டிருக்கும் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு, உண்மையில் கள நிலவரங்கள் தெரிவிக்கப்படுகின்றனவா என்ற கேள்வி வலுப்படுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## விமானத்தில் மலேசியா, சென்னைக்கு 5,400 நட்சத்திர ஆமைகள் கடத்தல்



ஆலந்தூர், டிச.7

மலேசிய நாட்டு தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சென்னைக்கு நேற்று காலை பயணிகள் விமானம் வந்தது. பயணிகளின் உடமைகளை சுங்க அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது சென்னையைச் சேர்ந்த ரமேஷ் ஆகாஷ், தமிம் அன்சாரி முகமது ரபிக் ஆகிய இருவரும் சுற்றுலாப் பயணிகளாக, மலேசியா சென்று விட்டு வந்தது தெரிந்தது. அவர்கள் கொண்டு வந்த பெரிய அட்டை பெட்டியை சோதனை செய்தபோது அதில் அரியவகை சிவப்பு காது உள்ள அலங்கார நட்சத்திர ஆமைகள் ஏராளமானவை உயிருடன் இருந்ததை கண்டுபிடித்தனர். அவர்கள் நட்சத்திர ஆமைகளை கடத்தி வந்திருப்பது தெரிந்தது. இதையடுத்து மொத்தம் 5,400 சிவப்பு காது நட்சத்திர ஆமைகளை பறிமுதல் செய்தனர். இதன் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.75 லட்சம் என்று கூறப்படுகிறது. இந்த வகை சிவப்புக் காது அலங்கார நட்சத்திர ஆமைகள் தாய்லாந்து, மலேசியா, ஐரோப்பிய நாடுகளில் அதிகமாக காணப்படுகின்றன. இவைகளை பெரிய பங்களாக்களில் அலங்கார தொட்டிகளில் வைத்து வளர்த்து வருகின்றனர். மேலும் மருந்துகள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.பறிமுதல் செய்யப்பட்ட நட்சத்திர ஆமைகளை, மீண்டும் மலேசியா நாட்டிற்கு திருப்பி அனுப்பவும் அதற்கான செலவுகளை கடத்தலில் ஈடுபட்ட 2 பயணிகளிடமும் வசூலிக்கவும் முடிவு செய்தனர்.அதன்படி நேற்று இரவு சென்னையில் இருந்து கோலாலம்பூர் சென்ற பயணிகள் விமானத்தில், 5,400 நட்சத்திர ஆமைகளும் மலேசிய நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆமை கடத்தலில் ஈடுபட்ட ரமேஷ் ஆகாஷ் , தமிம் அன்சாரி முகமது ரபிக் ஆகிய 2 பேரையும் அதிகாரிகள் கைது செய்து மேலும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## 3 பேர் உயிரிழப்பு எதிரொலி பல்லாவரம் பகுதியில் மருத்துவ முகாம் அமைப்பு



சென்னை, டிச.7

சென்னை தாம்பரம் 13 வது வார்டு பகுதியில் கழிவுநீர் கலந்த குடிநீர் குடித்த பொதுமக்களுக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது.பல்லாவரம், ஆலந்தூர் பகுதிகளில் மாநகராட்சி குழாயில் வந்த குடிநீரை குடித்த 23 நபர்களுக்கு கடும் வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதையடுத்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பம்மல் பகுதியை சேர்ந்த திருவேதி (57), வரலட்சுமி, மோகனரங்கன் ஆகிய 3 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதற்கிடையே உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை நேரில் சந்தித்து அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆறுதல் கூறினார்.

மேலும் குடிநீரில் கழிவுநீர்கலக்கவில்லை என்றும் அவர் கூறினார்.பலி எண்ணிக்கை 3 ஆக உயர்ந்த நிலையில் பல்லாவரம் பகுதியில் ப்ளீச்சிங் பவுடர் தெளிக்கப்பட்டுள்ளது. மேலும் யாரும் பாதிக்காத வகையில் மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

## பொங்கல் பண்டிகை: அரசு விரைவு பஸ்களில் இதுவரை 30 ஆயிரம் பேர் முன்பதிவு

சென்னை, டிச.7

முன்பதிவு செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.11, 12, 13 தேதிகளில் சிறப்பு பஸ்கள் விடுவதற்கு அரசு ஏற்பாடு.பொங்கல் பண்டிகை அடுத்த மாதம் (ஜனவரி) வருவதையொட்டி ரெயில்களில் இடம் கிடைக்காதவர்கள் இப்போதே அரசு பஸ்களில் முன்பதிவு செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அரசு விரைவு பஸ்களில் 90 நாட்களுக்கு முன்பே முன்பதிவு செய்யும் வசதி உள்ளதால் முன்பதிவு செய்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதுவரை 30 ஆயிரம் பேர் வரை முன்பதிவு செய்துள்ளதாக போக்குவரத்து கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொங்கல் பண்டிகையை யொட்டி 11, 12, 13 தேதிகளில் சிறப்பு பஸ்கள் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்து வருகிறது. இருந்த போதிலும் பஸ்களில் முன்பதிவு செய்ய மக்களிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது.

ஜனவரி மாதம் பஸ்களில் முன்பதிவு விறுவிறுப்பாக இருக்கும் என்றும் குறைந்தபட்சம் 1½ லட்சம் பேர் முன்பதிவு செய்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.


## கணவர் விவாகரத்து கொடுக்காததால் கூலிப்படை ஏவி கொல்ல முயன்ற மனைவி 4 பேர் கைது



செங்குன்றம், டிச.7

கள்ளக்குறிச்சி மாவட்டம் பெருவாங்கூர் தெற்கு தெருவை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன் (33). கார் டிரைவர். இவரது மனைவி சிவகாமிஸ்ரீ. இருவரும் கருத்து வேறுபாடு காரணமாக 2 ஆண்டுகள் பிரிந்து வாழ்ந்து வருவதாக தெரிகிறது. இந்த நிலையில் சிவகாமி, கணவரிடம் விவாகரத்து கேட்டு கோர்ட்டில் மனுத் தாக்கல் செய்து உள்ளார். ஆனால் ராமகிருஷ்ணன் மனைவியை பிரிய மனம் இல்லாததால் விவகா ரத்திற்கு சம்மதிக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதற்கிடையே கடந்த 28ந்தேதி ராமகிருஷ்ணன் சென்னைக்கு சவாரி வந்தார். அப்போது அவரை செல்போன் மூலம் தொடர்பு கொண்ட மனைவி சிவகாமிஸ்ரீ பேச வேண்டும் என்று கூறி சோழவரம் அடுத்த ஜனப்பன்சத்திரம் கூட்டு சாலை கணேஷ் நகருக்கு வருமாறு அழைத்தார். ராமகிருஷ்ணன் அங்கு சென்ற போது 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்ம கும்பல் திடீரென அவரை சுற்றி வளைத்து சரமாரியாக வெட்டிவிட்டு தப்பி சென்று விட்டனர். இதில் தலை, கையில் பலத்த வெட்டுக் காயம் அடைந்த ராமகிருஷ்ணன்ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். இது குறித்து சோழவரம் போலீசார் வழக்கு பதிவு செய்து அங்குள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து விசாரணை நடத்தினர். இதில் விவாகரத்து கொடுக்க மறுத்ததால் கணவரை மனைவி சிவகாமிஸ்ரீயே கூலிப்படை ஏவி கொலை செய்ய முயன்றது தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து சிவகாமி ஸ்ரீ, மதுரவாயல் ஏரிக்கரையைச் சேர்ந்த நவீன், மதுரவாயல் கிருஷ்ணா நகரை சேர்ந்த கெல்வின் ராஜ், அரும்பாக்கத்தை சேர்ந்த நித்திஷ் ராஜ் ஆகிய 4 பேரையும் போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்களை பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் தலைமறைவான மேலும் சிலரையும் போலீசார் தேடி வருகின்றனர்.

## கேசவரம் அணைக்கட்டு நிரம்பி வழிகிறது



திருவள்ளூர், டிச.7

ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலம் வழியாக வரும் கல்லாற்று தண்ணீர் திருவள்ளூர் மாவட்டம் பேரம்பாக்கம் அடுத்து கேசாவரம் அணைக்கட்டு பகுதிக்கு வரும். பின்னர் அங்கிருந்து கூவம் ஆறு, கொசஸ்தலை ஆறு என 2 ஆறுகளாக பிரிகிறது.கேசவரம் அணைக்கட்டு நிரம்பினால், நேரடியாக கொசஸ்தலை ஆற்றில் செல்லும் நீர் பூண்டி ஏரிக்கு செல்லும். இதேபோல் அணைக்கட்டின் மற்றொரு புறம் அமைக்கப்பட்ட, 16 ஷட்டர்கள் வழியாக செல்லும் மழைநீர் கூவம் ஆறாக மாறி பேரம்பாக்கம், மணவாளநகர், அரண்வாயல், புதுச்சத்திரம் வழியாக சென்னை நேப்பியார் பாலம் அருகே சென்று கடலில் கலக்கும். இந்த நிலையில் ஃபெஞ்ஜல் புயலால் ஏற்பட்ட கனமழையின் காரணமாக கேசவபுரம் அணைக்கட்டு முழுவதும் நிரம்பி வழிகிறது. அணைக்கட்டிற்கு தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்தபடி உள்ளது. இதையடுத்து 1000 கன அடி நீர் கேசவபுரம் அணைக்கட்டில் இருந்து வெளியேறி வருகிறது. இதனால் கொசஸ்தலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் பூண்டி ஏரிக்கும் நீர்வரத்து அதிகரித்து நீர் மட்டம் கிடு, கிடுவென உயர்ந்து வருகிறது.பாகசாலை, மணவூர், விடையூர், நாத்தவாடா, நாராயணபுரம் ஆகிய பகுதியில் கொசஸ்தலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பூண்டி ஏரிக்கு தண்ணீர் வருகிறது. இதேபோல் கூவம் ஆற்றிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் பேரம்பாக்கம் பிஞ்சிவாக்கம், ஏகாட்டூர், புட்லூர் ஆகிய பகுதியில் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட தடுப்பணைகள் முழுவதுமாக நிரம்பி காணப்படுகிறது. கூவம் ஆற்றின் நடுவே உள்ள புதுச்சத்திரம் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு புதுச்சத்திரம் தரைப்பாலம் மூழ்கும் அளவிற்கு தண்ணீர் செல்கிறது. புதுச்சத்திரம் தரைப்பாலம் மூழ்கினால் அவ்வழியாக செல்லும் வாகனங்கள் 20 கி.மீ, தூரம் சுற்றி செல்லும் நிலை ஏற்படும்.

## விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலையில் மழையால் பாதித்த மக்களுக்கு ரேஷனில் இலவச அரிசிபருப்பு



சென்னை, டிச.7

பெஞ்ஜல் புயல்மழையால் வட மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளன. குறிப்பாக விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் இதன் தாக்கம் மிக அதிகமாக உள்ளது.திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும் மழையின் அளவு வழக்கத்தை விட மிக அதிகமாக இருந்தது. இந்த மழையால் பல்வேறு ஊர்களில் ரேஷன் கடைகளும் மழை நீரில் மூழ்கி விட்டது.அந்த கடைகளில் இருந்த உணவு பொருட்களும் வீணாகி விட்டது. தற்போது மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு ரேஷன் கடைகளில் உணவுப் பொருட்கள் தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. உணவு மற்றும் கூட்டுறவு துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் கடந்த 3 நாட்களாக விழுப்புரம் கடலூர் மாவட்டங்களில் முகாமிட்டு ரேஷன் பொருட்கள் தடையின்றி மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்து வருகிறார். இதற்கிடையே மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் சார்பில் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

வெளியூர்களில் இருந்து அரிசி, பருப்பு, துணிமணிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுதவிர விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் ரேஷன் கடைக்கும் சென்று இலவசமாக பொருட்கள் வாங்கலாம் என அறிவிக்கப்பட்டு உள்ளது. அதன்படி அரிசி, பருப்பு, சர்க்கரை ஆகியவற்றை மக்கள் பெற்றுச் செல்கின்றனர்.

## மோதுவோம் என்றாகிவிட்டது... வா மோதுவோம்... வருண்குமார் ஐபிஎஸ்க்கு சீமான் சவால்



கோவை, டிச.7

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கோவையில் இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து 13 ஆண்டுகளாக நாம் தமிழர் கட்சியை நடத்தி வருகிறோம். தேர்தலில் நின்று 36 லட்சம் வாக்குகளை பெற்று, மூன்றாவது தனிப்பெரும் கட்சியாக நாம் தமிழர் கட்சி உள்ளது. ஆனால் திருச்சி எஸ்.பி. வருண்குமார் ஐ.பி.எஸ். எதனை வைத்து நாம் தமிழர் கட்சியை பிரிவினைவாத இயக்கம் என்று சொல்கிறார். அடிப்படை தகுதி இல்லாமல் எப்படி அவர் ஐ.பி.எஸ். ஆனார். தமிழ், தமிழர் என்பது எப்படி பிரிவினைவாதம் ஆகும். எங்கள் கட்சியை குறை சொல்லத்தான் ஐ.பி.எஸ். படித்தாரா? மோதுவோம் என்றாகிவிட்டது. வா மோதுவோம். நடிகர் விஜய் மக்களுக்கு உதவ நினைப்பதை குறை சொல்ல முடியாது. எப்போதும் குறை சொல்லிக் கொண்டிருக்க நாங்கள் மன நோயாளி அல்ல. தமிழகத்தில் இதுவரை பாதித்த புயல் பாதிப்புகளுக்கு, மத்திய அரசு இதுவரை உதவி செய்யவில்லை. மாநிலங்கள் தரும் வரியை எடுத்து வைத்துக் கொண்டு, பேரிடர் காலங்களில் கூட மத்திய அரசு உதவுவது இல்லை. குஜராத், பீகார் மாநில வெள்ள பாதிப்பிற்கு உடனே மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. இதுபற்றி கேள்வி கேட்டால் ஆன்ட்டி இந்தியன் என்கிறார்கள். அசாமில் மாட்டிறைச்சிக்கு தடை விதிக்கப்பட்டிருப்பது கேவலமானது. 28 விழுக்காடு மக்கள் இரவு உணவு இல்லாமல் உறங்க செல்கிறார்கள். சொந்த நாட்டு மக்களின் உணவை உறுதி செய்ய வேண்டும். உணவு, உடை என்பது அவரவர் உரிமை. மாடு புனிதம் என்றால், எதற்காக மாட்டுக்கறியை ஏற்றுமதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## மழை பாதிப்புகளை சரி செய்வதில் தி.மு.க. அரசு படுதோல்வி அடைந்து விட்டது ராமதாஸ் குற்றச்சாட்டு

திண்டிவனம், டிச.7

திண்டிவனம் அருகே உள்ள தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:மழை பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாப்பதில் தி.மு.க.அரசு தோல்வி கண்டுள்ளது. மழை பாதிப்பு மற்றும் நிலச்சரிவால் 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மழையால் ஏற்பட்ட பாதிப்பை விட தி.மு.க. அரசின் அலட்சியத்தால் மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். மக்களுக்கு விழிப்புணர்வு இல்லாததால் வரும் முன் காப்போம் என்ற திறன் இல்லை.நவம்பர் 30ந் தேதியே 117 அடிக்கு மேல் சாத்தனூர் அணை கிட்டதட்ட நிரம்பியது. மத்திய நீர்வள ஆணையம் வெளியிட்ட எச்சரிக்கையின்படி அணையை திறந்துவிட மாநில அரசுக்கு அறிவுறுத்தியது. இதை செயல்படுத்தாமல் இந்த அரசு உறங்கிவிட்டது. அரசு தவறு செய்து விட்டது என்று குற்றம் சாட்டினால் எச்சரிக்கை செய்து விட்டதாக கூறியுள்ளது. நள்ளிரவில் விடப்பட்ட எச்சரிக்கை மக்களை சென்றடையவில்லை. இதனால் மக்கள் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டனர். 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் கன அடி தண்ணீரை திறந்து விட்டிருந்தால் இந் நிலை ஏற்பட்டு இருக்காது.மழை பாதிப்புகளை சரி செய்வதில் தி.மு.க. அரசு படுதோல்வி அடைந்து விட்டது. தமிழக மக்கள் சரியான நேரத்தில் சரியான பாடத்தை புகட்டுவார்கள்.கடந்த 30 ஆண்டுகளில் 4 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாகவும், அவர்களின் பயிர் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற அறிக்கையை பா.ம.க. ஆதரிக்கிறது. இதை வலியுறுத்தி திருவண்ணாமலையில் வருகிற 21ந் தேதி உழவர் பேரியக்க மாநாடு நடைபெற உள்ளது.டெல்லியில் சமூகநீதி மாநாட்டில் காணொலி வாயிலாக பேசிய முதலமைச்சர் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என வலியிறுத்தியுள்ளார். இதைத்தான் நாங்கள் சொல்லி வருகிறோம். இதை ஏன் மாநில அரசு செயல்படுத்த தயங்குகிறது என்பதே வினா.கடை வாடகைக்கு 18 சதவீத விதிக்கப்படும் என ஜி.எஸ்.டி. கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இதை ரத்து செய்ய வணிகர்கள் போராட்டம் நடத்தியும் மத்திய அரசு திரும்ப பெற மறுக்கிறது. இம்முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும்.திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அருகே அகரம்பள்ளிப்பட்டியில் ரூ.16 கோடி மதிப்பில் கட்டப்பட்ட புதிய பாலம் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது அதிர்ச்சி அளிக்கிறது. அண்மையில் திறக்கப்பட்ட பாலம் வெள்ளத்தின் சீற்றத்தால் அடித்து செல்லப்பட்டதை ஏற்க முடியாது. இதற்கான காரணம் அறிய விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும். போக்குவரத்து கழக ஊழியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்த வேண்டும். இதனால் 88 ஆயிரம் ஓய்வூதியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அகவிலைப்படி வழங்க உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது. இது தொழிலாளர் விரோத போக்கு. அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்க பலவழிகள் உள்ளது.பொன்முடி மீது சேற்றை வாரி இறைத்ததை ஏற்க முடியாது. மக்களின்கோபத்தின்வெளிப்பாடு என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். முதலமைச்சர் அறிவித்த சிங்கார சென்னை வளர்ச்சியை சில ஆண்டுகளில் நாம் வானத்தை நோக்கி பார்க்கப்போகிறோம்.மானாமதுரையில் மின்சாரம் இல்லாததால் டார்ச் லைட் வெளிச்சத்தில் பணியாற்றிய டாக்டர்களை பாராட்டுகிறேன். நோயாளிகளிடம் டாக்டர்கள் கனிவாக பேசினால் பாதி நோய் போய்விடும். நான் அரசு ஆஸ்பத்திரியில் பணியாற்றியபோது மக்கள் எனக்கு கொடுக்கப்பட்ட பட்டம், சின்ன டாக்டர் என்பார்கள். காலை 7.30 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு சென்று பிற்பகல் 2 மணிக்கு மேல் திரும்புவேன். என்னை பார்க்க நோயாளிகள் நீண்ட வரிசையில் நிற்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## நீர்வழி ஆக்கிரமிப்பு பற்றி இ.பி.எஸ். பேசுவது அண்ணாந்து பார்த்து துப்பிக்கொள்வது போலாகும் அமைச்சர் காட்டம்



கிருஷ்ணகிரி, டிச.7

கிருஷ்ணகிரி மாவட்டம் துவாரகாபுரி கிராமத்தில் மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன் இல்ல திறப்பு விழா நடைபெற்றது. இதில் வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்ட நிருபவர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்த அவர், புயல் காரணமாக 3 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு வேளாண் பயிர் நீரால் முழுங்கி நாசமாகி உள்ளது. வேளான் துறை அதிகாரிகள் பாதிப்பு குறித்து நேரடியாக சென்று கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர். விலை நிலத்தில் உள்ள தண்ணீரை வெளியேற்றும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு உள்ளனர். தற்போது இயல்பு நிலை படிப்படியாக திரும்பி வருகிறது. இழப்பீடு குறித்து முதலமைச்சர் அறிவித்து உள்ளார். கணக்கெடுப்பு பணி முடிந்த பிறகு இழப்பீடு வழங்கப்படும். தி.மு.க. ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகள் தான் ஆகிறது. அ.தி.மு.க. 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தது. நீர் வழி ஆக்கிரமிப்பு குறித்து எடப்பாடி பழனிச்சாமி பேசுவது அண்ணாந்து பார்த்து துப்பிக்கொள்வது போலாகும். வெள்ள பாதிப்பு குறித்து குற்றம் சாட்டினால் அந்த பாதிப்புக்கு முழு பொறுப்பு அவர்கள் தான். காரணம் 10 ஆண்டுகள் அவர்கள் தான் ஆட்சியில் இருந்தனர். தற்போது நீதிமன்றம் நடவடிக்கை அடிப்படையில் நீர் நிலை ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு வருகிறது.பயிர்கள் பாதிப்பு குறித்து ஆய்வு செய்ய மத்திய அரசு குழு வந்து உள்ளது. அவர்கள் நேரடியாக பார்வையிட்ட பின் பாதிப்பு குறித்து கூறுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# பூண்டி ஏரிக்கு நீர் வரத்து 4,360 கன அடியாக அதிகரிப்பு



திருவள்ளூர், டிச.7
சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றும் முக்கிய ஏரிகளில் ஒன்று பூண்டி ஏரி. பூண்டி ஏரியில் தண்ணீர் இருப்பு குறைந்ததை தொடர்ந்து கடந்த செப்டம்பர் மாதம் முதல் கிருஷ்ணா தண்ணீர் ஒப்பந்தப்படி ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் பெஞ்ஜல் புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் கன மழை கொட்டித்தீர்த்தது. இதனால் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதேபோல் பூண்டி ஏரிக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளதால் நீர் மட்டம் கிடு, கிடுவென உயர்ந்து வருகிறது. கேசவபுரம் அணைக்கட்டில் இருந்து வெளியேறும் தண்ணீர், ஆரணி ஆறு, நந்தியாற்று தண்ணீர் மற்றும் ஏரி நீர்ப்பிடிப்பு பகுதியில் இருந்து தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டு இருப்பதால் பூண்டி ஏரிக்கு இன்று காலை நிலவரப்படி நீர் வரத்து 4 ஆயிரத்து 360 கன அடியாக உயர்ந்து உள்ளது. கடந்த 5 நாட்களில் பூண்டி ஏரியின் நீர்மட்டம் 7 அடி உயர்ந்து உள்ளது. பூண்டி ஏரியின் மொத்த உயரம் 35 அடி.

இதில் தற்போது 30.30 அடிக்கு தண்ணீர் உள்ளது. கடந்த 1ந்தேதி பூண்டி ஏரியின் நீர்மட்டம் 23.30 அடி இருந்தது குறிப்பிடத்தக்கது. பூண்டி ஏரியின் மொத்த கொள்ளளவு 3231 மில்லியன் கன அடி. இதில் 1810 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. 27 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழை இல்லாததால் புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து குறைந்து உள்ளது. புழல் ஏரிக்கு இன்று காலை நிலவரப்படி 209 கன அடியும், செம்பரம்பாக்கம் ஏரிக்கு 412 கனஅடியும் தண்ணீர் வருகிறது.

# 200 வீடுகளை ஒரு வாரமாக சூழ்ந்து நிற்கும் மழை நீர்



பொன்னேரி, டிச.7
ஃபெஞ்ஜல் புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் கனமழை கொட்டியது. பொன்னேரி, மீஞ்சூர் பகுதியிலும் பலத்த மழை பெய்தது. மழை விட்டு ஒரு வாரம் ஆகியும் இன்னும் பல இடங்களில் மழை நீர் வடியாமல் தேங்கி உள்ளது. மீஞ்சூர் பேரூராட்சிக்குட்பட்ட 1வது வார்டு கலைஞர்நகர் முதல் தெரு, 2வது தெரு ராஜேஸ்வரி நகர், பிரேமானந்தா பள்ளி தெரு உள்ளிட்ட இடங்களில் சுமார் 200க்கும் மேற்பட்ட வீடுகளை மழை நீர் சூழ்ந்து நிற்கிறது. குடியிருப்பு பகுதியில் முழங்கால் அளவிற்கு மழை நீர் சூழ்ந்துள்ளதால் அப்பகுதி மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். மேலும் மழை நீருடன் கழிவு நீர் கலந்து நிறம் மாறி துர்நாற்றம் வீசிவருகிறது. இதனால் நோய் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. இரவு நேரங்களில் அத்தியாவசிய பொருட்கள் வாங்க செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளதாக அப்பகுதி மக்கள் வேதனையுடன் தெரிவித்தனர். இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறும்போது, மீஞ்சூர் பகுதியில் தாழ்வான இடங்களில் இன்னும் மழைநீர் வடியாமல் தேங்கி நிற்கிறது. வீடுகளை சூழ்ந்து உள்ள தண்ணீரால் மக்கள் கடும் அவதி அடைந்து வருகிறார்கள். வீடுகளுக்கு விஷ பூச்சிகள் பாம்பு உள்ளிட்டவை வருகின்றன. இதனால் அச்சத்துடன் இருக்க வேண்டிய நிலை உள்ளது. இதுபற்றி பலமுறை அதிகாரிகளிடம் தெரிவித்தும் நடவடிக்கை இல்லை. குடியிருப்பு பகுதியில் தேங்கி உள்ள தண்ணீரை வெளியேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். இது குறித்து வார்டு உறுப்பினர் சுகன்யாவிடம் கேட்டபோது, மழைக்காலங்களில் தொடர்ந்து இப்பகுதியில் தண்ணீர் தேங்கும் பிரச்சனை உள்ளது. மழை நீர் வெளியேற உள்ள குழாய் மிகவும் சிறிதாக உள்ளது. மேலும் மழைநீர் கால்வாய் பல இடங்களில் ஆக்கிரமிப்பில் உள்ளன. பொன்னேரி மீஞ்சூர் சாலையில் கல்வெட்டு அமைத்து மழைநீர் வெளியேற நெடுஞ்சாலை துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது 4 மின்மோட்டார்கள் மூலம் மழை நீரை அகற்றும் பணி நடந்து வருகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் தண்ணீர் குறையாமல் உள்ளது என்றார். மகாபலிபுரத்தில் பெய்த கனமழையால் இன்னமும் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கி நிற்கிறது. பொதுப்பணித்துறை சாலை, கல்பாக்கம் சாலை, தேவநேரி, சிற்பக் கல்லூரி எதிரே உள்ள பகுதிகளில் புதிதாக உள்ள வீட்டு மனைகளில் மனை வாங்கியோர் சவுடு மணல்களை குவித்து வைத்திருப்பதால் மழைநீர் வடியாமல் தேங்கி நிற்கிறது. 4 நாட்களுக்கு மேல் மழை நீர் தேங்கி உள்ளதால் கருப்பு நிறமாக மாறி துர்நாற்றம் வீசுகிறது.

# குடிசை மாற்று வாரிய குடியிருப்பு மேற்கூரை இடிந்து விழுந்ததில் இளைஞர் பலி ரூ.5 லட்சம் நிவாரணம் அறிவிப்பு



சென்னை, டிச.7
சென்னை பட்டினப்பாக்கம் குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் குலாப் (22) என்பவர் மசூதியில் தொழுகையை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது வழியில் திடீரென 4வது மாடியில் இருந்து பால்கனி மேற்கூரை இடிந்து அவர் தலை மீது விழுந்தது. இந்த விபத்தில் காயமடைந்து ரத்த வெள்ளத்தில் மயங்கிய அவரை மீட்டு, அப்பகுதி மக்கள் ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்நிலையில் குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் மேற்கூரை இடிந்து விழுந்ததில் பலியான இளைஞர் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிவாரண நிதி வழங்கப்படும் என அமைச்சர் தா. மோ.அன்பரசன் அறிவித்துள்ளார். விபத்து ஏற்பட்ட குடியிருப்பை இடித்துவிட்டு புதிய குடியிருப்பு கட்டித் தரப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அவினாசியில் நடந்த கார் விற்பனையாளர் கொலையில் 5 பேர் கைது



அவினாசி, டிச.7
திருப்பூர் மாவட்டம் அவிநாசியை அடுத்துள்ள காசிகவுண்டன்புதூர் தாமரை கார்டன் பகுதியைச் சேர்ந்தவர் ரமேஷ் (வயது 45). இவருக்கு மனைவி மற்றும் 2 மகள்கள் உள்ளனர். ஊட்டியை பூர்வீகமாக கொண்ட ரமேஷ், திருப்பூரில் வீட்டில் இருந்தபடியே கார் கன்சல்டிங் மற்றும் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். இந்நிலையில், கடந்த 1ந்தேதி அதிகாலை நடைபயிற்சி சென்ற போது அவினாசி 6 வழிச்சாலையில் வைத்து காரில் வந்த மர்ம நபர்கள் அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் சரமாரியாக ரமேசை வெட்டிக்கொன்றனர். இந்த கொடூர கொலை வழக்கில் முதற்கட்டமாக, திருவாரூர் மாவட்டம் அறித்துவாரமங்கலம் பகுதியைசேர்ந்த கோபாலகிருஷ்ணன் (35), மன்னார்குடி பகுதியை சேர்ந்த அஜீத் (27), அதே பகுதியை சேர்ந்த சிம்போஸ் (23), சரண் (24) மற்றும் தேனி மாவட்டம் சில்லுவார்பட்டி பகுதியை சேர்ந்த ஜெயபிரகாஷ் (45) ஆகிய 5 பேரை அவினாசி போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

மேலும் கொலைக்கு பயன்படுத்திய 2 கார்கள், வீச்சரிவாள் மற்றும் கத்தி ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். கொலைக்கான காரணம் குறித்து போலீசார் நடதிய விசாரணையில் பரபரப்பு தகவல்கள் கிடைத்தது. ரமேசுக்கும், இர்பான் என்பவருக்கும் பணம்கொடுக்கல் வாங்கல் பிரச்சினை மற்றும் சேவூரில் இடப்பிரச்சினை இருந்து வந்தது. மேலும் இர்பான் ரமேசிடம் பெரிய தொகையை கடன் கேட்டு ள்ளார். அதற்கு பிணையாக பத்திரமோ பொருளோ இல்லாமல் பெரிய தொகை தர முடியாது என ரமேஷ் மறுத்ததோடு இர்பானை தகாத வார்த்தைகளில் பேசி உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த ரமேஷ், தனது நண்பர் அரவிந்தன் என்பவரிடம் தெரிவித்தார். இதையடுத்து ரமேசுக்கு உயிர் பயத்தை காட்டும் வகையில் அவரை மிரட்ட 2பேரும் முடிவு செய்தனர். இதற்காக கூலிப்படையை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் அஜீத், சிம்போஸ், சரண், மற்றும் ஜெயபிரகாஷ் ஆகியோரிடம் ரூ.4 லட்சம் பணம் கொடுத்துள்ளனர். மேலும் ரமேசை கை, கால்களில் மட்டும் வெட்டு மாறு கூறியுள்ளனர். ஆனால் கூலிப்படையினர் 5 பேரும் ரமேசின் தலையில் வெட்டியதால் அவர் உயிரிழந்தார். கொலைக்கு திட்டம் வகுத்த முதல் மற்றும் இரண்டாம் குற்றவாளிகளான இர்பான், அரவிந்தன் ஆகிய 2பேரை போலீசார் இன்று கைது செய்தனர். கடன் கேட்டு கொடுக்காததால் கூலிப்படையை ஏவி, தொழிலதிபர் கொலை செய்யப்பட்ட சம்பவம் திருப்பூரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அல்லு அர்ஜூன் மீது வழக்குப் பதிவு செய்ய காவல் துறை முடிவு



இயக்குநர் சுகுமார், நடிகர் அல்லு அர்ஜூன் கூட்டணியில் உருவாகி வெளியான திரைப்படம் புஷ்பா 2 தி ரூல். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான புஷ்பா 2 திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

வெளியீட்டுக்கு முந்தைய முன்பதிவில் மட்டும் ரூ. 100 கோடியை கடந்த புஷ்பா 2 திரைப்படம் உலகளவில் பல மொழிகளில் வெளியாகி இருக்கிறது. திரைப்படம் வெளியான நிலையில், புஷ்பா2 திரைப்படத்தை பார்க்க சென்றபோது கூட்ட நெரிசலில் சிக்கி பெண் உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண் ரேவதி என்பதும் அவருக்கு வயது 39 என்று கூறப்படுகிறது. உயிரிழந்த பெண்ணின் மகனும் கூட்ட நெரிசலில் சிக்கி காயமுற்ற நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது.

ஐராபாத்தில் சிக்கடப்பள்ளியில் சந்தியா திரையரங்கில் இரவு 9.30 மணிக்கு பிரீமியர் காட்சி நடைபெறுவதாக இருந்தது. அதற்கு வந்த அல்லு அர்ஜுனைக் காண கூட்டத்தில் ரசிகர்கள் முண்டியடித்த போது இந்த விபத்து நடந்ததாக தெரிகிறது. இந்த நிலையில் நடிகர் அல்லு அர்ஜுன் மீது வழக்குப்பதிவு செய்ய ஐதராபாத் போலீசார் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. திரையரங்கில் கூட்ட நெரிசல் ஏற்பட்டு பெண் உயிரிழந்த சம்பவத்தில் திரையரங்கு மீது ஏற்கெனவே வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஹிட் ஆன ஏ.ஆர். ரகுமான் பாடலை ரீமேக் செய்யும் சாம் சி.எஸ். மெட்ராஸ்காரன் 2வது சிங்கில் அப்டேட்

கடந்த 2016ம் ஆண்டு வெளியான 'கிஸ்மத்' படம் மூலம் மலையாள சினிமாவில் நாயகனாக அறிமுகமானவர் நடிகர் ஷேன் நிகாம்.

தொடர்ந்து அவரது நடிப்பில் வெளியான 'இஷ்க்', 'கும்பளங்கி நைட்ஸ்', 'ஆர்டிஎக்ஸ்' உள்ளிட்ட படங்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றன.

இதன் மூலம் மலையாள சினிமாவில் அடுத்து வளர்ந்து வரும் நடிகர்களுள் ஒருவராக திகழ்கிறார் ஷேன் நிகாம்.

ஷேன் நிகாம் தற்போது 'மெட்ராஸ்காரன்' என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் நாயகனாக களம் இறங்கியுள்ளார்.

இயக்குனர் வாலி மோகன் தாஸ் இயக்கியுள்ள இந்த படத்தில் கலையரசன், நிஹாரிகா கொனிடேலா, ஐஸ்வர்யா தத்தா, கருணாஸ், பாண்டியராஜன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

எஸ்.ஆர் புரொடக்சன்ஸ் சார்பில் ஜெகதீஷ் தயாரித்துள்ள இந்த படத்துக்கு சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார். பிரசன்னா எஸ் குமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். ஆர். வசந்தகுமார் படத்தொகுப்பு செய்கிறார்.

இந்நிலையில், ஷேன் நிகாம் தமிழில் கதாநாயகனாக அறிமுகமாகும் 'மெட்ராஸ்காரன்' திரைப்படத்தின் டீசர் சில மாதங்களுக்கு முன் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

படத்தின் முதல் பாடலான தை தக்க கல்யாணம் என்ற வீடியோ பாடல் சில மாதங்களுக்கு முன் வெளியானது. இந்நிலையில் படத்தில் அடுத்த பாடலான காதல் சடுகுடு பாடல் வரும் 7 ஆம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

இப்பாடல் மணிரத்னம் இயக்கத்தில் மாதவன் மற்றும் ஷாலினி நடித்து வெளியான அலைபாயுதே திரைப்படத்தில் இடம் பெற்ற காதல் சடுகுடு பாடலின் ரீமேக் வெர்ஷனாகும். இதனால் ரசிகர்களிடையே பெறும் எதிர்ப்பார்ப்பு உருவாகியுள்ளது. இப்பாடலின் ஒரு சிறிய ப்ரோமோ வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

# 2024 ஆண்டின் பிரபலமான இந்திய நட்சத்திரங்கள்.. டாப் 10 பட்டியல் வெளியீடு



தி இன்டர்நெட் மூவி டேட்டாபேஸ் (IMDb) 2024 ஆண்டுக்கான பிரபல இந்திய நட்சத்திரங்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் பல்வேறு புதுமுக நடிகர்கள் இடம்பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு வெளியான பட்டியலில் ஷாரூக் கான் முதலிடம் பிடித்து இருந்தார். இந்த நிலையில், 2024 ஆண்டுக்கான பிரபல நட்சத்திரங்கள் பட்டியலில் ஷாருக் கான் நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். இந்தப் பட்டியலில் திரிப்தி திம்ரி முதலிடம் பிடித்தார். இரண்டாவது இடத்தில் தீபிகா படுகோண், மூன்றாவது இடத்தில் இஷான் காட்டர், ஐந்தாவது இடத்தில் ஷோபிதா துலிபலா உள்ளனர். இவர்களைத் தொடர்ந்து ஷர்வாரி ஆறாவது இடத்திலும், ஐஸ்வர்யா ராய் ஏழாவது இடத்திலும், எட்டாவது இடத்தில் சமந்தா, ஒன்பது மற்றும் பத்தாவது இடங்களில் முறையே அலியா பட் மற்றும் பிரபாஸ் ஆகியோர் உள்ளனர்.

# இறுதி செய்யப்பட்ட சாம்பியன்ஸ் டிராபி ஹைபிரிட் மாடல்: இந்திய அணி இழப்பது என்னென்ன?




ஐசிசி நடத்தும் சாம்பியன்ஸ் டிராபி தொடர் அடுத்த வருடம் பாகிஸ்தானில் நடைபெற இருக்கிறது. நாங்கள் பாகிஸ்தான் சென்று விளையாடமாட்டோம் என இந்திய அணி (பிசிசி) தெரிவித்தது.

இதனால் போட்டியை ஹைபிரிட் மாடல் (பாகிஸ்தான் மற்றும் மற்றொரு நாடு) என்ற வகையில் நடத்த ஐசிசி விரும்பியது. ஆனால் பாகிஸ்தான் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. இதனால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

பேச்சுவார்த்தையின் போது ஹைபிரிட் மாடலுக்கு நாங்கள் சம்மதம். அதேபோல் இந்தியாவில் 2031 வரை நடைபெறும் ஐசிசி தொடர்களும் ஹைபிரிட் மாடலாக நடத்தப்பட வேண்டும் என பாகிஸ்தான் கோரிக்கை வைத்தது.

இதை பிசிசிஐ ஏற்கவில்லை. நேற்று ஐசிசி தலைவர் ஜெய் ஷா தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டு தலைவர் உள்ளிட்ட அனைத்து கிரிக்கெட் போர்டு தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதில் பாகிஸ்தான் ஹைபிரிட் மாடலுக்கு சம்மதம் தெரிவித்துள்ளது. இறுதி அறிவிப்பு விரைவில் வெளியாகும். அதனைத் தொடர்ந்து போட்டி அட்டவணை வெளியாகும். பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் (UAE) ஆகிய நாடுகளில் போட்டி நடத்தப்படுகிறது. இந்தியா விளையாடும் போட்டிகளில் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறும்.

அதேவேளையில் 2027 வரை இந்தியாவில் நடைபெற இருக்கும் ஐசிசி தொடர்கள் ஹைபிரிட் மாடலாக நடத்தப்படும் என முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது.

இந்த காலக்கட்டத்தில் இந்தியா பெண்கள் ஒருநாள் உலகக் கோப்பை போட்டியை நடத்த இருக்கிறது. 2026 டி20 உலகக் கோப்பை (ஆண்கள்) இலங்கையுடன் சேர்ந்து நடத்துகிறது.

பெண்கள் போட்டிகள் ஹைபிரிட் மாடலாக நடத்தப்பட வேண்டும். 2026 டி20 உலகக் கோப்பையில் பாகிஸ்தான் விளையாடும் போட்டிகள் இலங்கையில் நடத்தப்படும். ஒருவேளை அரையிறுதி, இறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதிப் பெற்றால் இந்த போட்டிகளும் இலங்கையில் நடத்தப்படும்.

கிரிக்கெட் வெற்றி பெற வேண்டும், அது மிக முக்கியமானது. ஆனால் அனைவருக்குமான மரியாதையுடன் இருக்க வேண்டும். கிரிக்கெட்டுக்கு சிறந்ததைச் செய்வோம். நாம் எந்த வடிவிலான கிரிக்கெட்டிற்கு சென்றாலும், அது சமமானதாக இருக்க வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டு தலைவர் நக்வி தெரிவித்துள்ளார்.

# நியூசிலாந்துக்கு எதிரான 2வது டெஸ்ட்: முன்னணி வீரர்களை இழந்து இங்கிலாந்து திணறல்



இங்கிலாந்து அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்டில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட் வெல்லிங்டனில் இன்று தொடங்கியது. டாஸ் வென்ற நியூசிலாந்து பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, இங்கிலாந்து அணி முதலில் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பென் டக்கெட் டக் அவுட்டானார். ஜாக் கிராலி 17 ரன்னிலும், ஜோ ரூட் 3 ரன்னிலும், ஜேக்கப் பெத்தேல் 16 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனால் இங்கிலாந்து அணி 43 ரன்கள் எடுப்பதற்குள் முன்னணி வீரர்களின் விக்கெட்டுகளை இழந்து திணறி வருகிறது.

நியூசிலாந்து சார்பில் மேட் ஹென்றி, நாதன் ஸ்மித் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.


NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041


Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.